விகாரி ஸு ஆனி மீ
ஜூன் - ஜூலை 2019

ஸ்ரீ:

மலர்: 2
இதழ்: 3

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com







கடை வெள்ளிக்கிழமை புறப்பாடு



விகாரி ஸ்ரீ ஆனி மீ
ஜூன் - ஜூலை 2019

மலர்: 2
இதழ்: 3

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

| வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri Sudhakar Thirumalai, Sri Rajagopalan Madhavan & Sri Sai Tej
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com






Phone : 0821-2422536

# ಶ್ರೀ ಬ್ರಹ್ಮತಂತ್ರ ಸ್ವತಂತ್ರ ಪರಕಾಲಸ್ವಾಮಿ ಮಠ

ಕೃಷ್ಣವಿಲಾಸ ರಸ್ತೆ, (ಜಗನ್ಮೋಹನ ಅರಮನೆ ಸಮೀಪ), ದೇವರಾಜ ಮೊಹಲ್ಲಾ,
ಮೈಸೂರು - 570024.

# SRI BRAHMATANTRA SWATANTRA PARAKALA SWAMY MUTT

Krishnavilasa Road (Near J.M. Palace), Devaraja Mohalla, Mysore - 570 024, Karnataka State, INDIA


ಶ್ರೀ ಲಕ್ಷ್ಮೀಹಯವದನ ಲಕ್ಷ್ಮೀನಾರಾಯಣಾಭ್ಯಾಂ ನಮಃ
ಶ್ರೀಮತೇ ರಾಮಾನುಜಾಯ ನಮಃ
ಶ್ರೀಮತೇ ನಿಗಮಾಂತ ಮಹಾದೇಶಿಕಾಯ ನಮಃ
ಶ್ರೀ ಬ್ರಹ್ಮತಂತ್ರ ಸ್ವತಂತ್ರ ಪರಕಾಲ ಗುರು ಪರಂಪರಾಯೈ ನಮಃ

Sree Lakshmi Hayavadana Lakshmi Narayanabhyam Namaha
Sreemathe Ramanujaya Namaha
Srimathe Nigamantha Maha Desikaya Namaha
Sri Brahmatantra Swatantra Parakala Gruruparamparayai Namaha

Ref,

Date 15/5/2018

॥ श्रीः ॥
॥ श्री मुखम् ॥

॥ श्रीमते लक्ष्मीहयवदन-लक्ष्मीनारायण-वेणुगोपालेभ्यो नमः ॥
॥ रामानुज-परांकुश-परकाल-महादेशिक-गुरुपरंपरेभ्यो नमः ॥
॥ श्री श्री श्री ब्रह्मतन्त्रस्वतन्त्रपरकालगुरुपरंपरायै नमः ॥

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம் மூலமாக
தேசிக ஸந்தேசம் என்னும் மலரை கண்டு அதில் வரும்
ஸ்லோகங்களில் அர்த்தங்கள் அழகாக இருப்பதையும்,
அதில் வரும் திவ்ய தேச நிழற் படங்களைக் கண்டும்
மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். இந்த மலர் தொடங்கி
ஒரு வருடம் நிறைவடைந்ததை கேட்டு மிகவும் மகிழ்ச்சியாக
உள்ளது. தொடர்ந்து நூறு ஆண்டுகளுக்கு மேலாக
இந்த மலர் வெளிவர வேண்டுமென்று ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவ,
ஸ்ரீலக்ஷ்மீநாராயணன், ஸ்ரீ வேணுகோபாலன் திவ்ய கடாக்ஷம்
ஸ்ரீபரகால குருபரம்பரையின் திவ்ய கடாக்ஷமும் நாராயண
ஸ்மரண பூர்வகமாக ஜய மங்களங்களை ஆசாஸனமும்
பண்ணுகிறோம்.

आचार्यनिर्देशानुसारेण,
दासश्रेष्ठः ।
अण्णादूर् . ई . व . वीरराघवाचार्यः ।
श्रीकार्यम् ।
श्रीब्रह्मतन्त्रस्वतन्त्रपरकालमठम् ।
मैसूरु ।

இவண்.
நாராயண ஸ்ம்ருதய:

|| श्री: ||

ஸ்ரீமதே ஸ்ரீ வராஹ மஹாதேசிகாய நம: ।

Srimathe Rangaramanuja Mahadesikaya Namaha
Srimathe Srinivasa Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Vedantha Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Mahadesikaya Namaha

Srimathe Srinivasa Mahadesikaya Namaha
Srimathe Nigamantha Mahadesikaya Namaha
Srimathe Bhghawathe Bashyakaraya Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Divyamani Padukabyam Namaha

**SRIRANGAM**
**SRIMAD ANDAVAN ASHRAMAM**

**H.Qrs. Melur Road, Srirangam, Tiruchirappalli - 620 006.**
**Phone : 0431 - 2432379**

**Date :**

| श्रीमते निगमान्तमहादेशिकाय नमः |

|| श्रीमते रामानुजाय नमः ||

ஸ்வாமி தேசிகன் ஹயக்ரீவனின் அவதாரம் என்றால் மிகை-
-யாகாது 'श्रोणा नक्षत्रं विष्णुर्देवता' என்று விளக்கின்றது. ஆகையால்
பெரியாழ்வாரும் அத்தத்தின் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன்
என்றும் திருவோணத் திருவிழவில் அந்தியம்போதில் அரியை
அழித்தவன் என்றும்,

பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம் புகுவார் புக்குப்போதுவார்
ஆணொப்பாரிவன் நேரில்லை காண்
திருவோணத்தான் உலகாளுமென்பார்களே என்றும்

அருளிச் செய்தார். பக்திஸாரரும் காணலுறுகின்றேன் கல்லருவி
முத்துதிர, ஓணவிழவில் ஒலியதிர என்று அருளினான். காளிதாஸனும்
नभो: नभस्ययो: मध्येऽवग्रह इवान्तरे என்றான். உத்ராடத்தி-
-லிருந்து அத்தம் 10 நாள் அத்தத்திலிருந்து ச்ரவணம் 10 நாள்
ஓணத்திலிருந்து உத்ராடம் 10 நாள் இப்படியிருக்க திருவோணத்
திருநாள் மிகவும் உயர்ந்தது. ஆகையால்தான் நம் ஆசார்ய
வள்ளல் தூப்புல் குலமணியும் தோன்றிய நக்ஷத்ரம் திருவோணம்
ஆகவே நக்ஷத்திரத்தின் ஏற்றமையின் காரணம்தான் ஸ்வாமி
தேசிகன் परमात्मस्वरूपानुरूपाविर्भावरूपं என்றார்கள் நம்
பெரியோர்கள்.

||श्री:||

ஸ்ரீமதே ஸ்ரீ வராஹ மஹாதேசிகாய நம: ।

Srimathe Rangaramanuja Mahadesikaya Namaha
Srimathe Srinivasa Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Vedantha Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Mahadesikaya Namaha
Srimathe Srinivasa Mahadesikaya Namaha
Srimathe Nigamantha Mahadesikaya Namaha
Srimathe Bhghawathe Bashyakaraya Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Divyamani Padukabyam Namaha

**SRIRANGAM**
**SRIMAD ANDAVAN ASHRAMAM**

**H.Qrs. Melur Road, Srirangam, Tiruchirappalli - 620 006.**
**Phone : 0431 - 2432379**

**Date :**

ஸ்வாமி குமாரர் வரதாசார்யரும் तस्य मासि श्रोणायां अवतीर्णाय सूरये என்றும் 'वेङ्कटेशावतारोऽयं तद्घण्टांशोऽथवा भवेत्' என்றும் அருளினார். ஸ்வாமி தேசிகனின் அவதாரம் மிகவும் உயர்ந்ததாயிற்று. ஸ்வாமி ஸகல ஜீவராசிகளும் உய்யவேண்டி அனுக்ரஹித்த க்ரந்தங்கள் பல பகுதிகளாக அமைந்திருக்கின்றன. அதின் முறையே காவ்ய, நாடக ஸ்தோத்ர வேதாந்த ரஹஸ்ய சில்லறை ரஹஸ்யங்களாக ஒன்றுக்கொன்று கலப்பு இல்லாத வழியைப் பின்பற்றி அருளினார். ஸ்வாமி தேசிகன் தத்வ விசாரத்தில் ரஹஸ்யக் கலப்பு இருக்காது. ரஹஸ்ய விஷயத்தில் தத்வ கலப்பு இருக்காது. இவ்வாறு அமைவது தேசிகனுக்கே உரியதாகும். ஆகையால் ஸ்வாமியின் விஷய வைலக்ஷண்யத்தின் பெருமையைப் பேசி மகிழ்கிறார்கள் ஆசார்யர்கள். மாட மாளிகையில் வீற்றிருக்கும் வேதாந்த தேசிகன் ஸந்நிதி தர்மகர்த்தாக்கள் தேசிக (सन्देश) ஸந்தேசம் என்ற மாதாந்திர பத்ரிகையை வெளியிடுகிறார்கள். அதற்கு பக்தர்களாகிய நாம் ஆதரவு தெரிவித்து அதில் வரும் விஷய வைபவங்களையும் நன்கு அனுபவித்து ஆசார்ய அனுக்ரஹத்திற்கும் எம்பெருமான் ப்ரீதிக்கும் பாத்திரர்களாக வேண்டுமென்று ~~ப்ரார்த்திக்கின்றேன்~~ ஸ்ரீ:பதியான எம்பெருமானிடத்தில் ப்ரார்த்திக்கின்றேன்.

நாராயண, நாராயண, நாராயண

இவண்
ஸ்ரீ வராஹ யதி

# விகாரி வருட ஆனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| ஜூன்/ ஜூலை | ஆனி | | | | | |
| 16.06.19 | 1 | சதுர்த்தசி | ஞாயிறு | அனுஷம் | விடாயாற்றி 3 ஆம் நாள். காலை திருமஞ்சனம். மாலை புஷ்ப பல்லக்கு (பொழுதுடன் திரு ஆராதனம்) | ஸ்ரீ S.ஸுந்தரம் |
| 17.06.19 | 2 | பௌர்ணமி | திங்கள் | கேட்டை | காலை பெருமாள் திருமஞ்சனம். மாலை வீதி புறப்பாடு. | ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன் |
| 18.06.19 | 3 | ப்ரதமை | செவ்வாய் | மூலம் | திருமால் வடை | |
| 19.06.19 | 4 | த்விதீயை | புதன் | பூராடம் | ஸேனைநாதன் | |
| 20.06.19 | 5 | த்ருதீயை | வியாழன் | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 21.06.19 | 6 | சதுர்த்தி | வெள்ளி | திருவோணம் | காலை பெருமாள், தாயார், தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள்புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | கொடநகர் Dr. S. துரைசுவாமி ஐயங்கார் பண்டு C/o. E. ஸ்ரீதரன் |
| 22.06.19 | 7 | பஞ்சமி | சனி | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 23.06.19 | 8 | ஷஷ்டி | ஞாயிறு | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு. | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 24.06.19 | 9 | ஸப்தமி | திங்கள் | பூரட்டாதி | திருமால் வடை | |
| 25.06.19 | 10 | அஷ்டமி | செவ்வாய் | உத்திரட்டாதி | திருமால் வடை | |
| 26.06.19 | 11 | நவமி | புதன் | ரேவதி | திருமால் வடை | |
| 27.06.19 | 12 | தசமி | வியாழன் | ரேவதி 00.50 (6.20 AM) / அஸ்வனி | திருமால் வடை | |
| 28.06.19 | 13 | ஏகாதசி | வெள்ளி | அச்வினி | காலை தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை உள் புறப்பாடு | அத்திகிரி அருளாளன் |
| 29.06.19 | 14 | ஏகாதசி / த்வாதசி | சனி | பரணி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் (ஹரிவாசரம்) கோயில்ஏகாதசி மாலை பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ ராஜகோபாலன் |
| 30.06.19 | 15 | த்ரயோதசி | ஞாயிறு | கார்த்திகை | கலியன் | |
| 01.07.19 | 16 | சதுர்த்தசி | திங்கள் | ரோஹிணி 8.01 (9.10) | கண்ணன் ஆஸ்தானம் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 02.07.19 | 17 | அமாவாசை | செவ்வாய் | ம்ருகசீர்ஷம் | காலை பெருமாள் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு. | ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி |
| 03.07.19 | 18 | ப்ரதமை | புதன் | திருவாதிரை (4.51) / புனர்வஸு | கோடை உத்ஸவம் 1 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. | ஸ்ரீ K.S. ஸந்தானம் – ஸ்ரீ K. வரதராஜன் |
| 04.07.19 | 19 | த்விதீயை | வியாழன் | புனர்வஸு (2.02)/ புஷ்யம் (56.00) | கோடை உத்ஸவம் 2 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. | ஸ்ரீமதி L. வத்ஸலா – ஸ்ரீ D. வரதராஜன் |
| 05.07.19 | 20 | திருதீயை | வெள்ளி | ஆயில்யம் | கோடை உத்ஸவம் 3 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு.. தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ A.R. க்ருஷ்ணன் – ஸ்ரீ K. ரங்கராஜன் |
| 06.07.19 | 21 | சதுர்த்தி | சனி | மகம் | கோடை உத்ஸவம் 4 ஆம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. | ஸ்ரீ T.P. ரங்கராஜன் – ஸ்ரீ G. பத்ரிநாராயணன் |
| 07.07.19 | 22 | பஞ்சமி | ஞாயிறு | பூரம் | கோடை உத்ஸவம் 5ஆம் நாள்.காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. | ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோகன் – ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 08.07.19 | 23 | ஷஷ்டி | திங்கள் | உத்திரம் | கோடை உத்ஸவம் 6ஆம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. தாயார் உள்புறப்பாடு | Dr. P. க்ருஷ்ணமூர்த்தி – ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன் |
| 09.07.19 | 24 | ஸப்தமி | செவ்வாய் | ஹஸ்தம் | கோடை உத்ஸவம் 7ஆம் நாள்.காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. | ஸ்ரீ R.S. ராகவன் – ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸா சாரியார் |
| 10.07.19 | 25 | அஷ்டமி 4.04 (7.37AM) / நவமி | புதன் | சித்திரை | ஸ்ரீசுதர்சன ஜெயந்தி. மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம். ஆஸ்தானம் | ஸ்ரீ N.R. ராமஸ்வாமி |
| 11.07.19 | 26 | தசமி | வியாழன் | ஸ்வாதி | ஆனி கருடன். பெரியாழ்வார் சாற்றுமுறை. காலை பெருமாள், ஆழ்வார் திருமஞ்சனம். மாலை பெருமாள் சின்ன கருட வாஹனம். ஆழ்வார் யானை வாஹனம். வீதிபுறப்பாடு ஆஸ்தானம், ஸேவாகாலம் சாற்றுமுறை | ஸ்ரீ M.D.S. பண்ட் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12.07.19 | 27 | ஏகாதசி | வெள்ளி | விசாகம் | காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள்புறப்பாடு. | ஸ்ரீமதி S. பாமா |
| 13.07.19 | 28 | த்வாதசி | சனி | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்ரம் காலை பெருமாள், நாதமுனிகள் திருமஞ்சனம். மாலை பெருமாள், நாதமுனிகள் வீதி புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்சனம் உபயம் ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பண்டு. புறப்பாடு உபயம் ஸ்ரீ A. வாஸுதேவன் – ஸ்ரீ N.V. பாலாஜி |
| 14.07.19 | 29 | த்ரயோதசி | ஞாயிறு | கேட்டை | தொண்டரடிப் பொடிகள், ஸ்ரீ ஸுதர்சன ஹோமம் | ஸ்ரீ ஸுதர்சன ஹோமம் SVDD |
| 15.07.19 | 30 | சதுர்த்தசி | திங்கள் | மூலம் | திருமால் வடை | |
| 16.07.19 | 31 | பௌர்ணமி | செவ்வாய் | பூராடம் | சந்த்ர க்ரஹணம் | |

**ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை மஹோத்ஸவ ஸபா, ஸ்ரீரங்கம்**

வழங்கும்

# தமிழ்மறை இன்னிசைத் திருவிழா

**ஜூலை 11 (வியாழன்) முதல் 13 (சனி) வரை மூன்று நாட்கள்**

தினமும் காலை 9.30 முதல் 12.30 மணி வரை உபந்யாஸங்களும்,

மாலை 6.30 மணி முதல் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

**இடம்: ஸ்ரீ தேசிக வித்யா பவனம், வெங்கடேச அக்ரஹாரம்,**

மயிலாப்பூர், சென்னை – 4.



## ஆனியில் முக்கிய உத்ஸவங்கள்

**ச்ரவணம்**
ஜூன் 21 (வெள்ளி)

**கோடை உத்ஸவம் (7 நாட்கள்)**
ஜூலை 3 (புதன்) முதல் 9 (செவ்வாய்) வரை

**ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி**
ஜூலை 10 (புதன்)

**பெரியாழ்வார் திருநக்ஷத்ரம் – ஆனி கருடன்**
ஜூலை 11 (வியாழன்)

**நாதமுனிகள் திருநக்ஷத்ரம்**
ஜூலை 13 (சனி)

**ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்**
ஜூலை 14 (ஞாயிறு)

ஸ்ரீ:

# கடவுள் வாழ்த்து

ஸ்ரீ உ.வே. பழவேரி சக்ரவர்த்தி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

**முன்னுரை:**

நூலியற்றுபவர் தான் இயற்ற எடுத்துக்கொண்ட நூல் இனிது முடிதற்காகப் பெரியோரின் மரபுப்படி நூலின் ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்து இயற்றுவது முறையாகும். இதை வடமொழியில் மங்கள ச்லோகம் என்பர். நாடகங்களில் நாந்தீ ச்லோகம் எனப்படும். இது ஆசீர்வாத ரூபமாயும், நமஸ்கார ரூபமாயும், வஸ்துநிர்தேச ரூபமாயும் (நூலில் கூறப்படப்போகிற பொருளின்சுருக்காயும்) அமைக்கப்படவேண்டும். இக்கட்டுரையில் பொதுவாக மங்களச்லோகதைப் பற்றியும் ஸ்வாமி தேசிகனின் மங்கள ச்லோகங்களைப் பற்றியும் சிறிது காண்போம்.

**கடவுள் வாழ்த்தைப்பற்றிய குறிப்பு:**

நற்செயல்களுக்கெல்லாம் தடங்கல் வருவது இயல்பாகும். அங்ஙனம் நல்ல நூலை இயற்றுவதும் நற்செயலாகையால் அதற்கும் தடங்கல் வருதல் இயற்கையே. இதைக் கருதி நூலியற்றுபவன் தன் மனம், மொழி, மெய்யால் கடவுளை வணங்கி ஆரம்பிப்பதும் இயல்வேயாம். ஆயினும் மனதால் மட்டும் வணங்காமல் பாடலாக நூலின் ஆரம்பத்தில் இயற்றி வணங்குதல் தன் மாணாக்களுக்குப் பாடம் புகட்டும் பொருட்டும் அமையுமென்பதால் பெருமையுடையதாகும். கடவுள் வாழ்த்து இஷ்டதேவதையை மட்டும் வணங்கும் பாக்களாகவோ, ஆசார்யர்களை மட்டும் வணங்கும் பாக்களாகவோ அல்லது இஷ்ட தேவதை மற்றும் ஆசார்யர்களை வணங்கும் பாக்களாகவோ அமைக்கப்படுவதுண்டு. சில நாத்திகர்களின் நூல்களிலும்கூட இறைவணக்க மில்லாவிடினும் அவர்களின் தலைவர்களைப் போற்றும் பாடல்களைக் காணவியலும்.

கடவுள் வாழ்த்து ஒரே பாடலாய் அமைந்திருக்க வேண்டும் என்பதில்லை. பல பாக்களாயும் அமைக்கப்படலாம். முதலில் மட்டும் இருக்க வேண்டும் என்பதில்லை. ஒவ்வொரு காண்டத்து க்கும், அதிகாரத்துக்கும் கூட மங்கள ச்லோகங்கள் அமைக்கப்படலாம். மல்லிநாதன் ஒவ்வொரு சர்கத்தின் ஆரம்பத்திலும் ரகுவம்சத்துக்குத் தான் இயற்றிய வ்யாக்யானத்தில் மங்கள ச்லோகம்



இயற்றியுள்ளதைக் காணலாம். கம்பன் ஒவ்வொரு காண்டத்தின் ஆரம்பத்திலும் ஒரு கடவுள் வண க்கத்தைச் செய்துள்ளதைக் காணலாம்.

கடவுள் வாழ்த்து மங்களமான சொல்லிலும் எழுதிலும் ஆரம்பிக்கும்படி கவிகள் பாட்டை இயற்றுவர். ஸ்ரீபாஷ்யகாரர் *நிகிலபுவன* என ஆரம்பிக்காமல் *அகிலபுவன* என அகரத்தில் ஆரம்பித்ததைக் காணலாம். அகாரம் விஷ்ணுவைக் குறிக்கும். திருவாய்மொழி *உயர்வற* என்று பிராட்டியைக் கூறும் உகாரத்தில் ஆரம்பிப்பதைக் கண்ட கம்பன் தன் இராமகாவியத்தில் உலகம் *யாவையும்* என ஆரம்பித்ததைக் காணலாம்.

**கடவுள் வாழ்த்து தேவையா?**

கடவுளை வாழ்த்துவதால் தடங்கல் விலகி நூல் இனிதே முடிவு பெறும் என்கிற சாத்திரத்தை ஏற்பதில் சில குழப்பம் ஏற்படலாம். மங்கள ச்லோகங்களுடன் கூடிய நூல்கள் சில முடிவு பெற்றுள்ளதைப் போலே சில முடிவுறாமல்

இருப்பதையும் காண்கின்றோம். மங்கள ச்லோகத்துடன் ஆரம்பித்துள்ள *தர்க்க ஸங்க்ரஹம்* முடிவு பெற்று புகழுடன் விளங்குகின்றது; பாணபட்டனின் *காதம்பரி* மங்கள ச்லோகத்துடன் ஆரம்பித்தும் பாதியில் நின்றுள்ளது.

இக்குழப்பத்தை நீக்க பல பெரியோர் பல காரணங்களைக் கூறியுள்ளனர். ஒருபானை சோற்றுக்கு ஒருசோற்றின் பதம் பார்ப்பதுபோல் ஒன்றைக் காணலாம். கடவுள் வணக்கம் இன்றி இயற்றிய நூல் முடிவடைந்திருக்கக் காரணம் தடங்கல் இராமையால் ஆகும். தடங்கல் நேர்ந்திருப்பின் அது முடிவடைந்திருக்காது. ஆகையால் எழுத்தாளனுக்குத் தன் வினையைப்பற்றிய அறிவு இல்லாமையால் கடவுள் வாழ்த்தை இயற்றுதல் நலமாகும்.

மழைக்காலத்தில் குடையை எடுத்துக்கொண்டு இராமன் என்ற ஒருவன் கோவிலுக்குப் புறப்படுகின்றான். அவனுடன் அவன் நண்பனும் கிளம்ப, அவனைக் குடையை எடுத்துக்கொள்ளச் சொல்கிறான் இராமன். அதற்கு நண்பன் இசையவில்லை. அன்றுமழையும்வரவில்லை.இருவரும்பெருமாளை ஸேவித்து வீடு திரும்பினர். வீடு திரும்பிய பின் நண்பன் இராமனைப் பார்த்து குடையை வீணாகக் கோவிலுக்குக் கொண்டுவந்தாய்! எனச் சொல்வதை ஒக்கும் கடவுள் வாழ்த்தின்றி நூலெழுதி நூலை முடித்தானொருவன் கடவுள் வாழ்த்துடன் நூலெழுதி முடித்தவனைப் பார்த்து பரிஹஸிப்பது.

காரீரி என்ற யாகத்தை அநுஷ்டித்தும் மாரி இல்லையேல் யாகத்தை அநுஷ்டித்த வகையில் சில தவறுகள் காரணமாவதைப் போலே கடவுள் வாழ்த்து காணப்பட்டும் முடிவை எட்டாத நூல்கள் விஷயத்திலும் அதை இயற்றியவனின் நம்பிக்கையின்மை முதலியவற்றையே காரணமாகக் கொள்ளவேண்டும்.

தடங்கல் இல்லாத எழுத்தாளன் எழுதிய கடவுள் வாழ்த்து வீண்தானே எனலாம். அதற்கு தடங்கலைப் போக்குதல் என்ற பலன் இல்லை எனினும் மற்றும் பல பயன்கள் உண்டு. தன் மாணாக்கர்களுக்கு, கடவுள் வாழ்த்து சாத்திரப்படி அவசியம் இயற்றப்படவேண்டும் என்பதை அறிவித்ததே ஒருபலன் தானே! மற்றும் அது உயரிய பாடலாய் அமையப்பெறின் அதை இயற்றியவனும் படிப்பாரும் ரசிப்பதும் ஒரு பலன் தானே! அது மட்டுமல்ல; அது அந்நூலின் பொருளைச்சுருக்கமாகக் கூறுமாறு அமைக்கப்



பட்டிருப்பின் மேல் விவரணம் பண்ணப்படும் பொருளைச்சுருக்கமாக அறிவித்தல் என்ற பயனைக் கொண்டது தானே! கடவுள் வாழ்த்தின்மேல் பற்பலகேள்விகளும் அதற்கு நம் ஆன்றோர் கூறும் பதில்களும் விரிவுக்கஞ்சி விடப்படுகின்றன.

**ஸ்வாமி தேசிகனின் மங்கள ச்லோகங்கள்:**

ஸ்வாமி தேசிகன் நூற்றுக்கணக்கான மங்கள ச்லோகங்கள் அருளிச்செய்துள்ளார். இவர் தமிழில் மங்கள ச்லோகங்கள் இயற்றியுள்ளார். வடமொழியில் இயற்றியுள்ளார். பல யாப்புகளில் — சந்தஸில் இவற்றை இயற்றியுள்ளார். பகவானைத் துதிக்கும் வகையில் சிலவற்றை அமைத்துள்ளார். ஆசார்யர்களைத் துதிக்கும் வகையில் சிலவற்றை அமைத்துள்ளார். பகவான், ஸத்துக்கள் மற்றும் ஆசார்யர்களைத் துதிக்கும் வகையில் சிலவற்றை அமைத்துள்ளார். ஒன்றுக்கு மேற்பட்ட ச்லோகங்களைக் கொண்ட மங்கள ச்லோகங்கள் சிலவற்றை இயற்றியுள்ளார். ஸ்ரீசததூஷணீயில் ஒவ்வொரு வாதத்தின் ஆரம்பத்திலும் ஒரு மங்கள ச்லோகம் இயற்றியுள்ளார். மங்களமான சொற்களில் ஆரம்பிக்கும்படி இவற்றை அமைத்துள்ளார். மங்கள ச்லோகங்களில் நூலின் ஸாரத்தைக் குறிப்பிட்டுச் சிலவற்றில் அமைத்துள்ளார். விபவாவதார எம்பெருமான்களின் மேல் சில நூல்களிலும், அர்ச்சாவதார எபெருமான்களின் மேல் சில நூல்களிலும், ஆழ்வாராசார்யர்களின் மேல் சில நூல்களிலும் மங்கள ச்லோகத்தை அமைத்துள்ளார். சிலவற்றை ஆசீர்வாதமுகமாயும், சிலவற்றை வணங்கும் வகையிலும், சிலவற்றை வஸ்துநிர்தேச ரூபமாயும் அமைத்துள்ளார். இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட ரூபத்திலும் மங்கள ச்லோகங்களை அமைத்துள்ளார். அநுபந்த சதுஷ்டயத்தைக் (நூற்பயன், கற்க அதிகாரி, நூற்கருப்பொருள், நூலுக்கும் பொருளுக்குமுள்ள தொடர்பு ஆகியவற்றைக்) குறிக்கும் வகையிலும் கடவுள் வாழ்த்தை அமைத்துள்ளார்.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தின் மங்கள ச்லோகம் *குருப்ய: தத்குருப்யச் ச நமோவாகமதீமஹே - வ்ருணீமஹே ச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம் பதீ* என்பதாகும். இவ்வழகிய ச்லோகத்தை கர்மாநுஷ்டான காலத்திலும் அநுஸந்தித்து வருகிறோம். என்னுடைய குருவுக்கும், அவருடைய குருக்களுக்கும் நம: என்கிற உக்தியை அத்யயனம் பண்ணுகின்றோம். அத்தகைய குருக்களின் கூட்டத்தில் ஜகத்காரணபூதர்களான தம்பதிகளை -- சேஷிகளை -- சரணவரணம் பண்ணுகின்றோம் என்பது இதன் பொருளாகும்.

ஸ்வாமி, இம்மங்கள ச்லோகத்தில் பெருமாள், தாயார், ஆசார்யர்கள் அனைவரையும் வணங்கி யுள்ளார். தம்பதி என்ற சொல்லால் தத்வமும், *வ்ருணீமஹே* என்ற சொல்லால் *ப்ரபத்தி என்னும் ஹிதமும், ஜகதாம்பதீ என்றதால்* பேறும் குறிப்புணர்த்தப்பட்டன. சுருக்கமான பொருள் இதுவானாலும் இதன் ஆழ்பொருளை அறிவிக்கத் தனிக்கட்டுரை வரையலாம். ஒன்றை மட்டும் கூறிக் கட்டுரையை முடிக்க விழைகிறேன்.

இம்மங்கள ச்லோகம் குரு என்ற சொல்லில் ஆரம்பிக்கின்றது. இச்சொல்லிலுள்ள ‘கு’ என்ற சொல் இருட்டையும், ‘ரு’ என்ற சொல் அதைப் போக்குவதையும் குறிக்கின்றது. ஆசார்யன் மனவிருளைப் போக்குவதால் ‘குரு’ எனப்படு கின்றான். ஆனால் ‘அமங்களமான இருட்டு என்ற சொல்லில் க்ரந்தத்தைக் அரம்பித்தது கூடுமா?’ என எண்ண வேண்டாம். ‘கு’ என்ற சொல் போக்கடிக்கப்படவேண்டிய இருட்டைப் பற்றியதாலே இதுவும் மங்களமானதே ஆகும். இதைத் தத்வடீகையில் ஆசார்யரே காட்டியுள்ளார்.

மற்றும் துய்யகுலசேகரன் என ஸ்வாமி தேசிகனால் கொண்டாடப்பட்ட குலசேகராழ் வார் *இருள் இரிய* எனத் தன் திருமொழியை ஆரம்பித்ததும் மங்களகரமானதே என்பதையும் ஸ்வாமியின் திருவுள்ளத்தால் அறியலாம். இதனால் சிஷ்டாசாரத்தையும் ஸ்வாமி காட்டியுள்ளார் என்பதை அறியலாம். பன்னியுரைக்குங்கால் பாரதமாம்!

**முடிவுரை:**

ஸ்வாமி தேசிகனின் மங்கள ச்லோகங்கள் அனைத்தையும் அறிந்தாலே பண்டிதனாகலாம். *ஒரொன்றுதானே அமையாதோ!* என ஸ்ரீபிள்ளை உலகாசிரியர் அருளிச்செய்தது ஸ்வாமியின் க்ரந்தங்களுக்கு மட்டுமின்றி மங்கள ச்லோகங் களுக்கும் ஒக்கும்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**









## ப்ரஹ்மோத்ஸவக் காட்சிகள்

(பக்கம் 11 முதல் 26 வரை)




DeNTeeZ
Mon - Thurs & Sat
Friday
Sunday
Dr. M. AZWEER HUSSAIN, MDS
Dr. C. MOHSINA, BDS
MS-OFFICE
Tally
Ladies & Kids only
சக்தி ஜோதிடம்
98432 46519
Sai Kalai






















9043390819
SHREYAS

































ஶ்ரீ:
























































HDFC BANK


XEROX
RESTAURANT




XEROX

















ஸ்ரீ:

# அந்தணர் மாடு

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சனாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

*செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை.*

இது திருவள்ளுவரின் வாக்கு. செவியினால் கேட்டறியப்படும் செல்வமான வேதமே, செல்வங்களில் தலைசிறந்ததாம். இப்படி காதுகளால் கேட்டறிவதாலேயே — **ச்ரவணேந்த்ரிய த்வாரா க்ருஹீதவ்யம்** — வேதமானது ச்ருதி என்று வழங்கப் படுகிறது.

குருவானவர் ஓதி அதை சிஷ்யர்கள் கேட்டு மறுபடியும் ஓதிப் பழகி, காலப்போக்கில் முகஸ்தமாக ஓதுதல்.

மற்றைய சுமையான கல்விகள் போல் அல்லது வேதம். கரும்பலகைகளில் ஆசிரியர் எழுதி, அதன் மூலம் மாணாக்கர்கள் அப்பாடங்களை அறிந்து, தேர்வுகளை எழுதி, தேர்ச்சி அடைந்து, நாளடைவில் அப்பாடங்களை மறப்பது என்பது சுமையான கல்விகளுக்குப் (அதாவது தேஹ யாத்ரையைப் பொருட்டே, நோக்கியே படிக்கப்படுபவை என்று கொள்ளலாம்) பொருந்தும்.

ஆனால் வேதாத்யயனம் என்பது அப்படிப்பட்டதல்ல. ஈடற்ற, தனித்து நிற்கும் தொகையான கல்வி யாகும். பிறக்கும் போதே நாம் கடன்களுடன் பிறக்கிறோம் என்று வேதம் கூறுகிறது — **த்ரிபி: ருணவா ஜாயதே, ப்ரஹ்மசர்யேண ரிஷிப்ய:, யஜ்ஞேன தேவேப்ய:, ப்ரஜயா பித்ருப்ய:** — ப்ரஹ்ம சர்யத்தை அநுஷ்டித்து வேதாத்யயனம் செய்து அதை கடைசி வரை காப்பாற்றுவதால் ரிஷிகளின் கடன் அடைக்கப்படுகிறது, யாக யஜ்ஞங்கள் அநுஷ்டிப் பதன் மூலம் தேவர்களின் கடன் அடைக்கப் படுகிறது, நைமித்திக கர்மாக்களை அநுஷ்டிப்பதன் மூலம் பித்ருக்களின் கடன் அடைக்கப்படுகிறது. ஆதலால் வேதமானது இன்றியமையாத கல்வி யாகவும், வாழ்க்கை நெறியாகவும், நெறியின் காரணமாகவும் அமைகிறது.

அநேக தேசங்களை திவ்ய தேசங்களாக்கிய வாள்வீசும் பரகாலனாம் ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் அந்தணர் மாட்டு அந்தி வைத்த மந்திரத்தை என்று ப்ராஹ்மணர்களின் செல்வம் (மாடு என்ற சொல்லின் பொருள்) வேதம் என்று பாசுரமிடுகிறார். ஆழ்வாரின் திருவுள்ளத்தை ஒத்த கலியன் உரை குடிகொண்ட கருத்துடையவராம் ஸ்வாமி ஸ்ரீ தேசிகனும் அந்தணர் மாட்டினும் என்று மறுபடியும் 'நம் செல்வம் வேதமே' என்பதை உறுதிபடுத்துகிறார்.



வேதங்களை விடச்சிறந்த சாஸ்த்ரம் இல்லை என்பதை **வேதாத் சாஸ்த்ரம் பரம் ந அஸ்தி** என்பதைக் கண்டு தெளிவுறலாம். வேதோண்கிலம் தர்ம மூலம் - உலகத்தின் ஆணி வேராக இருப்பது வேதமே - ஆதலால் இவ்வுலகத்தைத் தாங்கி நிற்பது வேதமே. ஆதௌ வேதா: ப்ரமாணம் - வேதங்களை விடச் சிறந்த ப்ரமாணங்கள் இல்லை என்பதை மனதில் நிறுத்துக. ஆதலால் வேதமானது ஸ்வத: ப்ரமாணம். தன்னைத் தானே நிரூபித்துக் கொள்வது வேதம். வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை வைதிக மதங்கள்.

வேதத்தின் சிறப்புகள் எண்ணற்றவை. சிலவற்றை காணலாம்:

**நித்யமானவை**

வேதத்தைச் சிறந்த கல்வி எனக்கருதி அதை காக்கும் பொருட்டு அதை பலவிடங்களில், பலர் ஓதிக்கொண்டே இருப்பதால், வேதமானது ப்ரவாஹ நித்யமாகிறது. ஓதுபவர்கள் இல்லவே இல்லை (வேத சப்தங்களே இல்லை) என்றால் அது ப்ரளயமாகும். அச்சமயம் ஸர்வேச்வரனான ஸ்ரீஹரி தன் அபார, ஆபூர்வ சக்தியினால், **யோ ப்ராஹ்மணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை** என்றபடி ஆனுபூர்வி சிறிதும் மாறாமல் வேதங்களை ப்ரஹ்மதேவருக்கு உபதேசம் செய்கிறான்.

**துன்னிய பேரிருள் சூழ்ந்து உலகை மூட,**
**மன்னிய நான்மறை முற்றும் மறைந்திட,**
**பின்னிவ்வுலகினில் பேரிருள் நீங்க...**

என்று பகவான் வேதத்தை மீட்டதை ஸ்ரீ பெரியாழ்வார் போற்றுகிறார். ஆகவே வேதமானது அநாதியானது.

**அபௌருஷேயம்**

ஸ்ரீ பாஷ்யகாரர், **ஏதத் ஏவ ச வேதஸ்ய அபௌருஷேயத்வம் நித்யத்வம் ச** என்று அருளுகிறார்.

மற்ற அனைத்து க்ரந்தங்களும் இன்னாரால் இயற்றப்பட்டது, இந்த ஸ்வாமியால் அருளப்பட்டது என்பது போல் இல்லாமல் நித்யமான, ஸத்யமான ஸ்ரீமந்நாராயணனின் திரு உடம்பே வேதங்கள். ஸ்ரீ தூப்புல் குளவிளக்கானவர் **சோராது அனைத்தும் அவன் உடம்பென்னும் சுருதிகளால்** என்றபடி வேதத்தையும், பகவானையும் பிரித்துப் பார்க்க முடியாது. ஆதலால் நித்யமான, படைப்புக்கப் பாற்பட்ட ஸ்ரீஹரியின் உடம்பாதலால் வேதம் ஒருவரால் இயற்றப்படாததாயிற்று.

**அனந்தத்வம் (அனந்தா வை வேதா:)**

ப்ருஹத் ப்ருஹத: பரத்வாஜ ரிஷி: — ஜ்ஞானத்தில் மிக உயர்ந்தவரான ஸ்ரீ பரத்வாஜர் தேவேந்த்ரனிடம் வரம்கோரினார், முன்னூறு வருஷம் வேதம் ஓதினேன், இன்னும் முன்னூறு வருஷம் வேண்டுமென — **பரத்வாஜ: த்ரிபி: ஆயுர்பி: ப்ரஹ்மசர்யம் உவாஸ** — தேவேந்த்ரன் மூன்று மலைகளைக் காட்டி, தேவரீர் முன்னூறு வருஷங்களாக ஓதினவெல்லாம் இவைகளில் (மலைகளில்) மூன்று கைப்பிடியளவே என்றார். ஆகவே வேதங்களுக்கு ஆதியுமில்லை, அந்தமும் இல்லை.

**அவிச்சின்ன பரம்பரா ப்ராப்தத்வம்**

இடைவிடாது வாழையடி வாழையாக காப்பாற்றப் பட்டு வருவது. வேதமறிந்தவர்கள், அத்யயனம் எப்படி கர்தவ்யமோ, அதேபோன்று அத்யாபனமும் கர்தவ்யம் என்று உணர்ந்து திருமாளிகைகளில், பாடசாலைகளில் சொல்லி வைப்பது — வேத வ்ருக்ஷத்தை அத்யாபனம் மூலம் வளர்ப்பது.

எப்படி க்ஷத்ரியனுக்கு தேச ராஜ்யமானது லக்ஷணமோ, வைச்யனுக்கு வ்யாபாரம் செய்வது லக்ஷணமோ, அந்த வகையில் வழங்கும்போது ப்ராஹ்மணனுக்கு வேதமே லக்ஷணமாகும். ப்ராஹ்மணனுக்கு மட்டுமே வேத அத்யாபன அர்ஹதை இருப்பதால் அந்தணர்களை அண்டியே க்ஷத்ரியனும், வைச்யனும் அத்யயனம் செய்ய வேண்டும்.

வேதாத்யயனம் இல்லாமல் மூன்று தலைமுறைகள் கழியக் கூடாது என்றும் அப்படி கழித்தால் அவர்கள் துர்ப்ராஹ்மணர்களாகிறர் என்றும் வேதத்தை நாடாமல் வேறு விஷயங்களில் உழைப்பவன் பஞ்சமன் ஆகிறான் என்றும் சொல்லப்பட்டிருப்பதால், வேதாத்யயனத்தின் முக்யத்வத்தை நாம் அறியலாம்.

**யே அர்வாங் உதவா புராணே** என்ற இடத்தில் வேத ஸம்ரக்ஷணத்தில் ஈடுபடுவோரிடம் ஹவ்ய-கவ்ய வாஹனரான அக்னி முதல் தேவதா ஸார்வபௌமரான ஸ்ரீஹரி வரை அனைத்து தேவதைகளும் வாஸம் செய்கின்றனர் என்றும் ஆதலால் அப்படிப்பட்ட மஹநீயர்களை தினம் தினம் நாடி நமஸ்காரங்களைச் செய்ய வேண்டும் என்றும் வேதமே அறிவுறுத்துகிறது. ஆதலால் வேத வித்துகள் ஸாமான்யர்கள் அல்லர். அவர்களிடம் அபசாரப்படுவது, அவர்களிடம் தோஷங்களைக் காண்பது என்பவை கூடவே கூடாது.

த்விஜகுல திலகரான ஸ்ரீ பெரியாழ்வார் **எண்ணா நாளும் இருக்கெசுச்சாமவேத நாண் மலர் கொண்டு உன பாதம் நண்ணா நாள், அவைதத்துறுமாகில் அன்று எனக்கு அவை பட்டினி நாளே** என்று நான்கு வேதங்களையும் (நான்கு வேதங்களின் ஆரம்பத்தில் உள்ள சில



பதங்களை ஓதி, ஸ்வசாகை தினம் ஒரு ப்ரச்னமாக ப்ரஹ்மயஜ்ஞத்தில் ஓதப்படுகிறது), தினமும் பகவத் ப்ரீத்யர்த்தமாக விண்ணப்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்,

**பண்டை நான்மறையும் சந்தமிகு தமிழ்மறையும்**

ஸ்ரீமந்நாராயணனே வேதம், வேதமே ஸ்ரீமந் நாராயணன் என்று பார்த்தோம். எந்த இடங்களில் வேதம் ஓதப்படுகின்றனவோ அவ்விடங்களில் பகவான் ஸ்மரிக்கப்படுகிறார். **மெய்நின்று கேட்டு அருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே** என்ற குருகூர் நம்பியின் அருளிச்செயலை நோக்கும் போது, எவ்விடங்களில் அருளிச்செயல்கள் ஸேவிக்கப் படுகின்றவோ, அவ்விடங்களில் ஸ்ரீ ஹரியானவர் மனம் உகந்து, மெய்நின்று திருச்செவி மடுத்தருளு கிறார் என்று ஸ்பஷ்டமாகிறது. இதனாலேயே அத்யாபக கைங்கர்யம் பெருமாளுக்கு உகந்தது என்று கொள்ளலாம். திருவீதி உத்ஸவங்களில் பெருமாள் அருளிச்செயல்களைத் தொடர்வதும், அச்செல்வனை நான்மறைகள் அவனுக்குப் பின்னால் தேடி ஓடுவதும் சிற்றின்பம் இசையாதார்க்கு இனிதாம்.

வேதத்திரள்களின் உட்பொருளை தெளிவு படுத்தவே, தெளியாத மறை நிலங்கள் தெளியவே ஸ்ரீ பெரிய பெருமாள் ஸ்ரீ திருமங்கை ஆழ்வாரைக் கொண்டு அத்யயனோத்ஸவம் நடத்திக் கொண்டான். இந்த உத்ஸவத்தில் தான் வேதத்திற்கு ஸமமான அந்தஸ்தை அருளிச்செயல்களுக்குக் கொடுத்து இன்புற்றான் அரங்கத்தரவணைப் பள்ளியான்.

ஆழ்வார்கள் திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்கையில் வேதங்களையும், வேதமோதும் அந்தணர்களையும், அவர்கள் வேள்விகளையும் சேர்த்தே பாசுரங்களிட்டதை ஆழக்கற்கிற்கில், தமிழ் மறைகள் வேதமார்கமானவை என்பது தெளிவுறும்.

எப்படி வேதாத்யயனம் செய்து, அதை ஓதிக் காப்பதால் கடன்கள் அடைக்கப்படுகின்றனவோ, அதே போன்று ஸ்ரீவைஷ்ணவர்கள் தன்னலமற்ற ஆழ்வார்களிடம் கடன்பட்டவர்கள் ஆகின்றனர். ஆதலால் சந்தமிகு தமிழ்மறைகளை அத்யயனம் செய்து திவ்ய, அபிமான க்ஷேத்ர, ஆசார்யன் ஸந்நிதி கைங்கர்யங்களில் ஈடுபடுவதால் ஆழ்வார்களிடம் நாம் பட்ட கடன்கள் தீரும்.

**க்ருஹாணாம் அஸமர்த்யை பஹவோ நோ க்ருஹா அஸன்** என்று மிகப் பரிவு கொண்ட வேதத்தின் பெருமைகளையும், அண்டமாள்வதாணை| அன்றேல் ஆள்வர் அமருலகே|| என்றபடி நாநாவித பலச்ருதிகளை அருளிய ஆழ்வார்களின், அவர்தம் பாசுரங்களின் பெருமைகளையும் சொல்லிக்கொண்டே போகலாம். உபய வேதங்களின் பெருமைகள் இவ்வளவு தான் என்று அளவிட்டோ, ஓராயிரம் பக்கங்களிலோ அடக்கிக்கூற முடியாது.

தலைச்சிறந்த செல்வங்களான உபய வேதங்களைப் போற்றி உகப்போம், புந்தியில் கொள்வோம், சாற்றி வளர்ப்போம். வேதோ ரக்ஷதி ரக்ஷித: ||

ஸ்ரீ:

# பிராட்டியின் பெருமை

ஸ்ரீமதி ரமா ராகவஸிம்ஹன்

உயர்வற உயர்நலம் உடைய எம்பெருமானும் பிராட்டியும் உபய விபூதிக்கு சேஷிகளாக இருந்து, கர்மபத்தர்களாகிய ஆச்ரிதர்களை படைத்து ரக்ஷித்து மோக்ஷம் அநுக்ரஹம் பண்ணுகின்றனர். 'ஸமஸ்தசிதசித் ப்ரபஞ்ச:' (எம்பெருமானும் பிராட்டியும் சித் அசித் மற்றும் ஸமஸ்த ப்ரபஞ்சங்களுக்கும் ஏக சேஷியாக உள்ளனர்) என்ற பாஞ் ராத்ர ஸம்ஹிதையின் வாக்கே இதற்கு ப்ரமாணமாகின்றது.

திவ்ய தம்பதிகளான எம்பெருமானும் பிராட்டியும் இந்த ஜகத்தின் ஏக உரிமையாளராக உள்ளனர் என்னும் பொருள் கொண்டு வரும் இந்த வாக்கானது, ஸ்ரீவைஷ்ணவத்தின் அஸ்திவாரமாக அமைகின்றது. எம்பெருமானைக் கொண்டாடுவதை விடவும் உயர்வாக பிராட்டியினைக் கொண்டாடும் ஸ்ரீவைஷ்ணவ க்ரந்தங்களும் புராணங்களும் எண்ணிலடங்கா. 'விஷ்ணுபத்நீ' என்பதனால் பிராட்டிக்கு ஏற்றம். 'ச்ரிய: பதி' என்பதனால் எம்பெருமானுக்கு ஏற்றம்.

ஸர்வ மங்கள பூதையான பிராட்டி அறியப்படுவது 'ஸ்ரீ' சப்தத்தினால். 'ஸ்ரீ' சப்தம் பிராட்டியினைக் குறிப்பதினால், 'ஸ்ரீவைஷ்ணவம்' என்பதின் தொடக்கமே அந்த பிராட்டி தான் என்றாகிறது. ஆழ்வார்களால் ஏற்றம் பெற்ற தமிழ் மொழியில் 'ஸ்ரீ' என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் 'திரு' என்பதாகும். 'ஸ்ரீ' மற்றும் 'திரு' என்ற இந்த இரு பதங்களிலும் ஸ்ரீவைஷ்ணவ கிருஹங்களில் புழக்கத்தில் உள்ள வார்த்தைகள் சிலவற்றை உதாரண மாகக் காண்போம். 'திருமண்காப்பு', 'ஸ்ரீசூர்ணம்', 'ஸ்ரீகருடன்', 'ஸ்ரீபாதம் தாங்கிகள்', 'ஸ்ரீராம நவமி', 'ஸ்ரீஜயந்தி', 'ஸ்ரீ வைகுண்டம்', 'ஸ்ரீபாததீர்த்தம்', 'ஸ்ரீமான்', 'ஸ்ரீமதி', 'ஸ்ரீமத்', திருப்பாற்கடல்', 'திருநக்ஷத்ரம்', 'திருநாடு', திருமாங்கல்யம்', 'திருவத்யயனம்' என்பவை சில.



வேத சாஸ்த்ரங்களானவை பிராட்டியை 'ஸ்ரீயதே', 'ச்ரயதே', 'ச்ருணோதி', 'ச்ராவயதி', 'ச்ருணாதி', 'ஸ்ரீணாதி' என்று ஆறு பொருள் அமையுமாறு கொண்டாடுகின்றன.

'ஸ்ரீயதே' என்ற சொல்லானது, 'பிராட்டிக்கு சேஷப்பட்ட அனைத்து ஆச்ரிதர்களாலும் அவள் ஸேவிக்கப்படுபவள்' என்ற அர்த்தத்தினைக் கொண்டுள்ளது.

'ச்ரயதே' எனும் போது, 'அனைத்து ஆஸ்ரிதர்களுக்கும் பூகலாய் இருக்கும் பிராட்டியானவள் எம்பெருமானை ஆச்ரயித்திருக்கின்றாள்' என்ற பொருள் கொண்டு வருகின்றது.

'ச்ருணோதி' என்று கொண்டாடப்படுகையில், 'ஆச்ரிதர்களின் அபயம் என்ற குரலை வாஞ்சையுடன் செவிமடுத்து, அவர்களுக்காக எம்பெருமானிடம் புருஷகாரம் பண்ணுகிறாள்' என்ற பொருள்பட வருகின்றது.

'ச்ராவயதி' எனும்போது, 'ந க்ஷமாமி' என்னுமளவுக்கு துராத்மாக்களாக இருக்கும் 'ஆச்ரிதர்களின் கூக்குரலையும் அந்த எம்பெருமானை செவிமடுக்கச் செய்பவளாய் உள்ளாள்' என்ற அர்த்தம் உண்டாகின்றது.

'ச்ருணாதி' என்ற சொல்லானது, பிராட்டியானவள் கருணையின் ஸாகரமாக, ஆச்ரிதர்களின் பாபங்களை எல்லாம் போக்குகின்றாள் என்ற பொருளினைக் கொள்கின்றது.

'ஸ்ரீணாதி' எனப்படும் போது, ஆச்ரிதர்கள் தாம் கரை சேர அபிலாஷையுற்று பண்ணும் கைங்கர்யங்களைநிர்விக்னமாக நடத்தி வைத்து, அவர்களை ரக்ஷிக்கின்றாள் என்ற பொருள் பட வருகின்றது.

துஷ்ட நிக்ரஹம் சிஷ்ட பரிபாலனம் பண்ணும் எம்பெருமானையே சேதனர்கள் மேல் கருணை கொள்ளச் செய்யும் பிராட்டியின் பாங்கு தான் என்னே! கருணா ஸாகரமாக பிராட்டி நமக்கு பண்ணும் அநுக்ரஹத்திற்கு எல்லையும் தான் உண்டோ! இதனால் தான் ஸ்ரீவைஷ்ணவமானது

எம்பெருமானை கொண்டாடும் அளவிற்கு, அவனுடைய ஹ்ருதய கமலத்தில் நித்யவாஸம் பண்ணும் பிராட்டியையும் போற்றிப் புகழ்கின்றது.

**ஆழ்வார் ஆசார்யர்கள் திருவாக்கில் பிராட்டியின் ப்ரபாவம்**

**ஸ்ரீ பாஷ்யகாரரின் சரணாகதி கத்யம்:**

ஸ்ரீவைஷ்ணவ தர்மம் தனில் சரணாகதி என்பது மிகவும் முக்யமான ஒரு அங்கமாகும். ப்ரபந்நர்கள் அந்த திவ்ய தம்பதிகளின் திருவடிகளை அடைவதற்கான சரணாகதி மார்க்கம்தனை, அநுஷ்டான பிராகாரமாக ஸ்ரீ பாஷ்யகாரர் ஸாதித்தருளியுள்ளார். இவை மூன்று கத்யங்களாக ஸ்ரீவைஷ்ணவர்களால் கொண்டாடப்படுகின்றன. சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம் மற்றும் ஸ்ரீவைகுண்ட கத்யம் என்றறியப்படும் இந்த மூன்று கத்யங்களும் 'கத்யத்ரயம்' எனப்படுகின்றது.

இவற்றில், சரணாகதி கத்யத்தில், ஒரு பங்குனி உத்ர நன்னாளில், ஸ்ரீரங்கநாதன் மற்றும் பெரிய பிராட்டியின் திருவடிகளில் சரணடையும் ப்ரகரணத்தில், ஆசார்யன் முதலில் தாயாரிடத்தே 'புருஷகாரப் ப்ரபத்தி' பண்ணுகிறார்.

**பகவந் நாராயண அபிமதாநு ரூப ஸ்வரூப ரூப குண விபவ ஐச்வர்ய சீலாதி...**

**பராசர பட்டரின் ஸ்ரீகுணரத்னகோசம்:**

ஸ்ரீரங்கே சரத: சதம் ஸஹ ஸுஹ்ருத்வர்கேண நிஷ்கண்டகம் நிர்துக்கம்...

''ஸ்ரீரங்கநாயகீ! பூலோக வைகுண்டமாம் ஸ்ரீரங்கத்தில் அடியேன் உனது திருவடியாக சதமானம் உய்ய வேண்டும். அவ்வாறு ஜீவிக்கும் காலத்தே, லோகமாதாவாகிய உன்னை ஸதா ஸ்துதி பண்ணும் பாக்கியம் எனக்கு அநுக்ரஹமாக வேணும். திவ்ய தம்பதிகளாகிய தங்களது ஸ்ரீபாத தூளிகளுள் ஒன்றாக நான் இருக்க வேணும். அடியேனுக்கு மாதாவாகவும், பிதாவாகவும் மற்றும் ஏனைய அனைத்து விதமான பந்துக்களாகவும், அடியேன் மோக்ஷம் பெற அநுகூலமான அனைத்து உபாயங்களாகவும் நீயே இருந்து, உன் கருணையினால் என்னை ரக்ஷித்து அருள்வாய்!''

லோகாயதமான விஷயங்கள் மட்டுமல்லாமல் எல்லாவற்றையும் விட உயர்ந்ததான மோக்ஷத்தையும் அநுக்ரஹம் பண்ண வல்லவள் தாயார் என்பதற்கு பராசர பட்டரின் இந்த வரிகள் ப்ரமாணமாய் அமைகின்றது.

**ஸ்ரீகூரத்தாழ்வானின் ஸ்ரீஸ்தவம்:**

*யஸ்யா: கடாக்ஷ ம்ருது வீக்ஷண தீக்ஷணேந*
*ஸத்ய: ஸமுல்லசித பல்லவம் உல்லலாஸ |*

**தேசிக மொழி**

பெரியபிராட்டியே! முன்பு என்பெருமான் தேவர்களையும் அசுரர்களையும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தபோது, அதினின்று அமுதம் திரண்டு நீயும் அவதரித்தாய். உடனே உன் நாயகனான எம்பெருமானுக்கு எதிரில் தாமரைப்பூவைச் சிங்காதனமாகக்கொண்டு அதில் அமர்ந்தாய். அப்பொழுது புஷ்கலாவர்த்தம் முதலான மேகங்கள் பூமாரிகளைப்போன்ற நீர்த்தாரைகளைப் பொழிந்து உலகங்களை மறைத்துவிட்டன. இப்படி மேகங்கள் தொடங்கி உன் திருமஞ்சனத்தை ஐராவதம், புண்டரீகம் முதலிய எட்டு திக்கஜங்களும் பொற்குடங்களைக் கொண்டு நீர்வார்த்துப் பூர்த்தி செய்தன. இங்ஙனம் ஸகல லோகங்களுக்கும் ஈச்வரியாகப் பட்டாபிஷேகம் செய்யப்பெற்றாய்.

**ஸ்ரீ ஸ்துதி**

*விச்வம் விபர்யய ஸமுத்த விபர்யயம் ப்ராக்*
*தாம் தேவ தேவ மஹிஷீம் ச்ரியம் ஆச்ரயாம: ||*

''தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய ஸ்ரீரங்க நாதனின் பட்டமஹிஷியாம் ஸ்ரீ ரங்கநாச்சியாரின் கடைக்கண் பார்வை கிட்டாததனால், ப்ரளய காலம்தனில் அண்டசராசரங்களும் வலுவற்றுத் துவண்டிருக்க, பிராட்டியானவள் தனது கடைக் கண் பார்வையினை அவற்றின் மீது செலுத்த வேண்டும் என்று ஸங்கல்பம் கொண்டாள். அப்படி அவள் ஸங்கல்பித்த அந்தக் க்ஷணம் பூமி தழைத்தோங்கிய து. வங்கக் கடல் கடைந்த மாதவனின் மனம் கவர்ந்தாளை நான் சரணடைகிறேன்.''

எம்பெருமானுக்கு இணையாக ச்ருஷ்டி, ஸம்ரக்ஷணம், மோக்ஷ ப்ராப்தி அநுக்ரஹம் பண்ணக் கூடியவள் பிராட்டி என்பதற்கு ஸ்ரீ கூரத்தாழ்வாரின் மேற்கண்ட வரிகளே ப்ரமாணமாகின்றது.

**லக்ஷ்மீ தந்த்ரம்:**

*மத்த: ப்ரக்ரியதே விச்வம் ப்ரக்ருதி: ஸ அஸ்மி கீர்த்திதா |*
*ச்ரயந்தீ ச்ரணீயாஸ்மீ ச்ருணாமி துரிதம் ஸதாம் ||*

''தாயாரானவள் இந்தப் ப்ரபஞ்சத்தினை ச்ருஷ்டித்த காரணத்தினால், 'ப்ரக்ருத்யை' என்று தான் போற்றப்படுவதாக உரைக்கின்றாள். ப்ரபந்நர்கள் அனைவரும் சரணாகதியென்று தன் திருவடிகளில் ஆச்ரயிப்பதற்கு தகுந்தவளாக தான் இருப்பதாகவும், அவ்வாறு தன் திருவடிகளில் சரணடையும் ப்ரபந்நர்களின் பாபங்களைப் போக்கி, அவர்களுக்கு மோக்ஷம் ப்ராப்தமாக தான் புருஷகாரம் பண்ணுவதாயும் ஸாதித்தருளுகிறாள்.''



தானும் தனது மணாளனான ஸ்ரீமந்நாராயணனும் ஒரே தத்வம் தான் என்பதற்கு பிராட்டியின் இந்த வாக்கானது ப்ரமாணமாகின்றது.

**விஷ்ணு புராணம்:**

*தேவ திர்யங் மநுஷ்யேண புந்நாமா பகவாந் ஹரி:|*

*ஸ்த்ரீநாம்நீ லக்ஷ்மீர்மைத்ரேய நாநேயார்வித்யேத பரம்||*

''இந்த ப்ரபஞ்சத்தில் உள்ள அனைத்து வஸ்துக்களும் எம்பெருமானிடத்தும் பிராட்டியினிடத்தும்அடங்கிவிடும்தன்மையுடையவையே. திவ்ய தம்பதிகளான இவர்களுள் அடங்காத வஸ்து என்று இங்கு ஒன்றும் கிடையாது. ஆண்பால் சார்ந்தவை எம்பெருமானுள்ளும் பெண்பால் சார்ந்தவை பிராட்டியினுள்ளும் அடங்குகின்றன.''

பிராட்டியின் ப்ரபாவமானது எல்லா விதத்திலும் அந்தஎம்பெருமானது ப்ரபாவத்திற்கு இணையானது என்பது இதிலிருந்து விளங்குகின்றது.

**நம்மாழ்வார் திருவாய்மொழி:**

*ஞாலத்தூடே நடந்தும் நின்றும் கிடந்திருந்தும்*
*சாலப் பலநாள் உகந்தோறு உயிர்கள் காப்பானே*
*கோலத் திருமாமகளோடு உன்னைக் கூடாதே*
*சாலப் பலநாள் அடியேன் இன்னும் தளர்வேனோ?*

''பலப்பல யுகங்களில் இந்தப் ப்ரபஞ்சந்தனில் ஜனிக்கும் ஜீவன்களையெல்லாம் நடந்தும் நின்றும் கிடந்திருந்தும், மிக்க கருணையுடனும் வாத்ஸல்யத்துடனும் காத்து ரக்ஷிப்பவனே! உன் திருவடிகளையும், க்ஷணமும் நீங்காது உன்னுடனே உறைபவளான பிராட்டியார் திருவடிகளையும் அடையாது, இன்னும் எத்தனை நாள் தளர்ந்திருப்பேனோ, யான் அறியேன். ரக்ஷித்தருள்வாய்!''

பிராட்டியின் ஸௌலப்யமும், ஆச்ரிதர்கள் கரை சேருவதற்காக அவள் பண்ணும் புருஷகாரமும், எம்பெருமானை விடவும் அவனது பத்நீயாகக் கொண்டாடப்படும் அவளது பெருமையினை அதிகரிக்கின்றது. ஒரு க்ஷணமும் எம்பெருமானை விட்டு நீங்காது அவனுடனே இருந்து ('அகல கில்லேன் இறையும்' என்பது ஆழ்வார் திருவாக்கு), தன்னுடைய ஒரே ஒரு புருவ நெளிப்பிலே சேதனர்களுக்காக அவனிடத்தே புருஷகாரம் பண்ணி, அவர்களுக்கு மோக்ஷம் அநுக்ரஹம் பண்ணுகிறாள் பிராட்டி. என்னே அவளது காருண்யம்! என்னே அவளது வாத்ஸல்யம்!

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸுமதி :** (ஸேவிச்சுட்டு) பாட்டீ! போன தடவை நாங்க ரெண்டு ஸந்தேஹம் கேட்டோம்; பதில் அப்பறமா சொல்றேன்னேள் – சொல்றேளா.

**பங்கஜம் பாட்டீ :** என்ன ஸந்தேஹம்-னு மறுபடியும் கேளுங்கோ.

**ஸுந்தரராஜன் :** அதான் பாட்டீ! ஒண்ணாவது ஸந்தேஹம் - ஸ்வாமி தேசிகனோட ப்ராசார்யரான வரதாசார்யர், புருஷராச்சே; அவரை 'அம்மாள்'-னு ஸ்த்ரீயைக் குறிக்கும் பதத்தாலே ஏன் சொல்றா ?

**பங்கஜம் பாட்டீ :** அதுக்கு, நடந்த ஒரு நிகழ்ச்சியச் சொல்லணும்; ஸ்வாமி வரதாசார்யருக்கு, தேவப் பெருமாளுக்கு தினமும் ராத்ரி காய்ச்சின பால் ஸமர்ப்பிக்கிற கைங்கர்யமுறை உண்டு. அப்படி ஸமர்ப்பிக்கும்போது ஒரு ஸமயம் திருமடைப்பள்ளி பரிசாரகர் கொண்டு வந்த பால், ரொம்பவும் உஷ்ணமா இருந்ததாம். இவ்வளவு சூட்டோட எம்பெருமானுக்கு ஸமர்பித்தால் அவருடைய திருவாயும்-நாக்கும் பொரிந்துவிடாதா ? அப்படீன்னு எண்ணி, பரிவோட பாலை கொஞ்சம் ஆற்றி, திட்டமான சூட்டில் தணிந்தப்பறம், பெருமாளுக்கு ஸமர்ப்பிச்சாறாம்!

ஸுந்தரராஜா! நீ கவனிச்சிருப்பே; தங்கச்சி ஸுமதி கொழந்தயா இருக்கச்சே, புட்டியில பாலை அம்மாகிட்ட குடுத்து போட்டச்சொல்லுவேன். அவ



உடனே குடுத்துடமாட்டா. பாட்டில்லேர்ந்து பாலை கொஞ்சம் தன் கையில பீச்சிப்பார்ப்பா - சூடு திட்டமா இருக்கான்னு check பண்ணிண்டு, அப்பறமாதான் போட்டுவா. ஏன் ? அதான் குழந்த பேர்ல அம்மாவுக்கு இருக்கும் பரிவு. இப்படி பண்ணியிருக்கார், ஸ்வாமி வரதாசார்யர்.

ஒருத்தர் செய்யும் கார்யத்தைப் பார்த்து, அவாளுக்கு ஒரு nick name வைப்பதுண்டு லோகத்துல. அதையொட்டி, அம்மாபோல பரிவு காட்டின அவரை, பெருமாளே 'என் அம்மாளோ!' அப்படீன்னாராம். அன்னிலேர்ந்து எல்லோரும் அவரை 'அம்மாள்'-னே அழைக்க ஆரம்பிச்சுட்டாளாம்!!

**ஸுமதி:** இதக் கேட்டாலே மயிர்க்கூச்சம் ஏற்படறது, பாட்டீ! அப்பறம் ரெண்டாவது ஸந்தேஹம் – ஸ்வாமி தேசிகன், வரதாசார்யர் கிட்ட படிச்சதில்லை; அப்படியிருக்கச்சே, அவர் எப்படி தேசிகனுக்கு ப்ராசார்யர் ஆகிறார்; அப்பறம், எந்த ஸந்தர்ப்பத்துல தேசிகனுக்கு அநுக்ரஹம் பண்ணினார் ?

**பங்கஜம் பாட்டீ:** இதுக்கு ஸமாதாநம், அடுத்த ச்லோகத்தில இருக்கு. நீ இப்ப கேட்டதால, இவ்வளவு சொல்றேன் – ஸ்வாமி தேசிகனுக்கு எல்லாத்துக்கும் ஆசார்யன், அவரோட மாமாவான அப்புள்ளார் ஆவார்.



இவர், அம்மாள் வரதாசார்யரோட சிஷ்யர். ஆக தேசிகனுக்கு அம்மாள் ப்ராசார்யராகிறார். ஸரியா! அப்பறம், அம்மாள் தேசிகனுக்கு அநுக்ரஹம் பண்ணின சரித்ரம் ரொம்ப அத்புதமானது.

தேவப்பெருமாள் ஸந்நிதி-ல (பல்லி மண்டபத்தை அடுத்து) கீழண்ட ப்ராகாரத்தில நாமெல்லாம் நாலுதடவை ஸேவிப்போமே, ஞாபகமிருக்கா ?

**ஸுந்தரராஜன்:** தெரியும் பாட்டீ; சொல்லிருக்கேள். அங்கேதான் அம்மாள் காலக்ஷேபம் ஸாதிக்கும் வழக்கமாம்; அதை ஸ்மரிச்சிண்டு அங்கே ஸேவிக்கிற வழக்கம்.

**பங்கஜம் பாட்டீ:** ரொம்ப ஸரி. ஒரு ஸமயம் காலக்ஷேபத்துக்கு போகச்சே அப்புள்ளார், ரொம்ப சின்னவனான மருமான் தேசிகனையும் அழச்சிண்டுபோனார். காலக்ஷேபம் நடந்திண்டிருந்தது. மாமாவும்-மருமானும் கோஷ்டியை ஸேவிச்சா. தேசிகன்தான் திருமலை வேங்கடேசனோட அவதாரமாச்சே. ராமன் வீதியில் செல்வதைப் பார்த்த மிதிலை நகரத்தார் எல்லோரும் மயங்கி நின்னுட்டா-னு சொல்றாளே, அதுமாதிரி அம்மாள்-மற்றும் சிஷ்யர்கள் எல்லோரும் பாலதேசிகனைப் பார்த்து மெய்மறந்துட்டா.

சிறிது நேரத்துக்கு அப்பறம் சுதாரிச்சிண்டு, காலக்ஷேபத்தை தொடர ஆரம்பிச்சார். ஆனா, யாருக்கும் விட்ட இடம் தெரியல்லையாம். குழந்தை தேசிகன் அந்த இடத்தை தன் மழலை மாறாத பேச்சால் சொன்னாராம். அம்மாளுக்கு ஒரே ஆச்சர்யம். அப்புள்ளாரிடம் 'யார் இந்தக் குழந்தை'-னு கேட்டார். அப்புள்ளாரும், தன் ஸஹோதரியோட பிள்ளை, அப்படீன்னார். அம்மாளும், 'இவன் ஸாதாரணக் குழந்தை அல்ல; வருங்காலத்தில் மற்ற மதத்தினரை அடக்கி, நம் வைதிக மதத்தை நிலை நாட்டப்போகிறான்; அவனுக்கு எல்லா மங்களமும் உண்டாகட்டும்' என ஆரூடமும் ஆசீர்வாதமும் அருளினார். இன்னும், 'இவனுக்குத் தகுந்த பிராயம் வந்தவுடன் நானே எல்லாம் உபதேசிக்கணும்-னு ஆசையாயிருக்கு; ஆனா, என் வயஸு இடம் கொடுக்கல. அதனால, நான் கட்டளையிடறேன். அப்புள்ளாரே! நீரே இவனுக்கு ஆசார்யராகவேணும்' என்றார். அப்புள்ளாரும் சிரமேற்கொண்டு அப்படியே நடப்பதாக சபதம் செய்தார்.

இதுதான், அம்மாள் தேசிகனுக்கு ப்ராசார்யரானதும், அநுக்ரஹித்ததுமான சரித்ரம்.






**SVDD thanks R. Parthasarathy & Family, Nanganallur, Chennai - 61, for sponsoring this month's issue of Desika Sandesam**









ஸ்ரீரங்கம்
ஸ்ரீமத் ஆண்டவன் மங்களாசாஸனம்



